INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY | DigitalAccess @Home

# DigitalAccess@Home

## 住家数码共享计划

## Skim ‘Akses Digital@Rumah’

## வீடுகளுக்கான மின்னிலக்கச் சேவைத் திட்டம்



In support of

In collaboration with

Supported by

# வீடுகளுக்கான மின்னிலக்கச் சேவைத் திட்ட விவரம்

குறைந்த வருமானக் குடும்பங்களின்
வேலை, சமூக நடவடிக்கைகள் உள்ளிட்ட
வாழ்க்கைமுறைத் தேவைகளுக்கு ஆதரவளிக்க,
மானிய விலையில் விரிவலைச் சேவையுடன்
மடிகணினிகள் / கைக்கணினிகள் வழங்குகிறது.



# யாரெல்லாம் விண்ணப்பம் செய்யலாம்?

வீடுகளுக்கான மின்னிலக்கச் சேவைத் திட்டத்திற்குத் தகுதி பெற, நீங்கள் பின்வரும் தகுதி நிபந்தனைகளை நிறைவேற்றுபவராக இருக்கவேண்டும்:

### வீட்டு வகை:

- வீடமைப்பு வளர்ச்சிக் கழக வீட்டில் வசிக்கவேண்டும்

### குடியுரிமை

- குடும்ப உறுப்பினர்களில் குறைந்தது ஒருவர் சிங்கப்பூர் குடியுரிமை பெற்றிருக்கவேண்டும்

### வருமானம்

- குடும்பத்தின் மொத்த மாத வருமானம்[1] ≤ $1,900 அல்லது தனிநபரின் சராசரி மாத வருமானம்[1] ≤ $650
- உங்கள் குடும்பத்தில் தொடக்கப்பள்ளிக்குச் செல்லும் மாணவர் அல்லது உடற்குறை உள்ளவர் இருந்தால், குடும்பத்தின் மொத்த மாத வருமானம் ≤ $3,400 அல்லது தனிநபரின் சராசரி மாத வருமானம்[1] ≤ $900

### தற்போது பெற்றுள்ளவர்களுக்கு

- தகவல்தொடர்பு ஊடக மேம்பாட்டு ஆணையத்தின் மின்னிலக்க அணுகல் திட்டங்களின் கீழ், மானியமளிக்கப்பட்ட விரிவலைச் சேவை அல்லது மானியமளிக்கப்பட்ட சாதனங்களின் (வீடுகளுக்கான மின்னிலக்கச் சேவைத் திட்டம், வீடுகளுக்கான விரிவலைச் சேவைத் திட்டம், NEU PC Plus) பயனாளிகளுக்கு முறையே மானியமளிக்கப்பட்ட விரிவலைச் சேவை அல்லது மானியமளிக்கப்பட்ட சாதனங்கள் வழங்கப்படாது

[1] வருமானம் கடந்த 12 மாதங்களின் சராசரியாகக் கணக்கிடப்படுகிறது. குடும்பத்தின் மொத்த வருமானம் (GHI) என்பது குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் கிடைக்கும் வேலை வருமானம், சுயதொழில் வருமானம், வாடகை வருமானம், மிகைநேரச் சம்பளம், செலவுத்தொகைகள், ரொக்க வழங்கீடுகள், தரகுத்தொகைகள், ஊக்கத்தொகைகள் அனைத்தையும் குறிக்கிறது. தனிநபர் சராசரி வருமானம் (PCI) என்பது குடும்பத்தின் மொத்த மாத வருமானத்தை, குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையால் வகுக்கும்போது கிடைக்கும் சராசரி வருமானத்தைக் குறிக்கிறது.

நீங்கள் விண்ணப்பம் செய்வதற்கு முன்னதாக, உங்களது தகுதிநிலையை www.go.gov.sg/digitalaccesschecker இணையத்தளத்தில் உள்ள சுய மதிப்பீட்டுக் கணிப்பானைப் பயன்படுத்தி சரிபார்ப்பது நல்லது.

# நான் எவ்வளவு பணம் செலுத்தவேண்டும்?
## (இணைக் கட்டணம்)

நீங்கள் செலுத்தவேண்டிய இணைக் கட்டணம், நீங்கள் தேர்ந்தெடுக்கும் பொருட்களுக்கு ஏற்ப இருக்கும். இணைக் கட்டணத் தொகைகளைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது:

| | மானிய விலையிலான விரிவலைச் சேவை (ஒன்றைத் தேர்ந்தெடுங்கள்) 36 மாதங்களுக்கு மாதக் கட்டணம் (பொருள், சேவை வரிக்கு முன்)[3] | | மானிய சாதன தொகுப்புகள் (ஒன்றைத் தேர்ந்தெடுங்கள்) ஒருமுறை செலுத்தும் கட்டணம் (பொருள், சேவை வரிக்கு முன்)[3] மைக்ரோசாப்ட் ஆபிஸ் மென்பொருள் (மடிகணினிகளுக்கு மட்டும்), 3 ஆண்டுதோறும் வைரஸ் தடுப்பு மென்பொருள் சந்தா, 3 ஆண்டுதோறும் உத்தரவாதம் ஆகியவை உள்ளடங்கும் | | | |
|---|---|---|---|---|---|---|
| **விண்ணப்ப வகை** | **M1** | | **ACER** | **JK Technology** | | |
| | **500 Mbps** | **1 Gbps** | **மடிகணினி** | **மடிகணினி** | **கைக்கணினி 8”** | **கைக்கணினி 11”** |
| **பிரிவு 1 / பொது வாடகை வீட்டுத் திட்டம்**<br>நீங்கள் அல்லது உங்கள் குடும்ப உறுப்பினர் ஒருவர் பின்வரும் திட்டத்தின்கீழ் உதவி பெறுகிறார்<br>• வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்தின் பொது வாடகை வீட்டுத் திட்டம்,<br>அல்லது<br>• சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சின் காம்கேர் நீண்டகால / குறுகியகால இடைப்பட்டகால உதவித் திட்டம்<br>அல்லது<br>• கல்வி அமைச்சின் நிதி உதவித்திட்டம் (FAS)[2], மற்றும் உங்கள் குடும்பத்தின் மொத்த வருமானம் ≤ $1,900 அல்லது தனிநபர் சராசரி வருமானம் ≤ $650 | $5 | $10 | $220 | $235 | $75 | $85 |
| **பிரிவு 2 / 1-3 அறை வீட்டில் வசிப்பவர்**<br>• நீங்கள் 1-3 அறை வீவக வீட்டில் வசிக்கிறீர்கள்<br>அல்லது<br>• நீங்கள் அல்லது உங்கள் குடும்பத்திலுள்ள ஒருவர் கல்வி அமைச்சின் நிதி உதவித் திட்டத்தின்கீழ்[2], உதவி பெறுவதோடு, உங்கள் குடும்பத்தின் மொத்த வருமானம் $1900க்கு மேலிருந்து $3,400 வரை அல்லது தனிநபர் சராசரி வருமானம் $650க்கு மேலிருந்து $900 வரை | $10 | $15 | $445 | $475 | $155 | $165 |
| **பிரிவு 3 / 4 அறை மற்றும் அதைவிடப் பெரிய வீட்டில் வசிப்பவர்**<br>நீங்கள் 4 அறை வீட்டில் அல்லது அதைவிடப் பெரிய வீட்டில் வசிக்கிறீர்கள் | $15 | $20 | $665 | $710 | $230 | $250 |

[2] கல்வி அமைச்சின் நிதி உதவித் திட்டங்களில் மத்திய பள்ளிகளுக்கான கல்வி அமைச்சின் நிதி உதவித் திட்டம், சிறப்புப் பள்ளிகளுக்கான சிறப்புக் கல்வி நிதி உதவித் திட்டம் (SPED-FAS), பலதுறைத் தொழில்கல்லூரி மற்றும் தொழில்நுட்பக் கல்விக்கழக மாணவர்களுக்கான உயர்கல்வி சமூக உதவி நிதி (HECB) பிரிவு 1 ஆகியவை உள்ளடங்கும்.

[3] கட்டணங்களுக்கு நடப்பிலுள்ள பொருள், சேவை வரி விதிக்கப்படும்.

# எப்படி விண்ணப்பம் செய்வது?

நீங்கள் ஒரு குடும்பத்துக்கு ஒரு விண்ணப்பப் படிவம் (இணையவழி/அச்சிடப்பட்டது) மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும்.

## 1 அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவம்

**'Hardcopy Submission'** என்பதன்கீழ் படிவத்தைப் பதிவிறக்கம் செய்வதற்கான சின்னத்தைத் தேர்ந்தெடுங்கள் அல்லது https://go.gov.sg/sgdcommhub இணையத்தளத்தில் பட்டியலிடப்பட்டுள்ள எங்களது எஸ்ஜி மின்னிலக்கச் சமூக நடுவங்களில் ஒன்றுக்குச் சென்று படிவத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**2** **படிவத்தைப் பூர்த்தி செய்யுங்கள்.** குடும்ப உறுப்பினர்கள் ஒப்புதல் அளிக்கவேண்டும்.

**3** **பூர்த்தி செய்த படிவத்தைத் தபாலில் அனுப்பி வையுங்கள்:**

Info-communications Media Development Authority (IMDA)
10 Pasir Panjang Road,
#03-01, Mapletree Business City,
Singapore 117438

## 1 இணையவழி விண்ணப்பம்

**www.digitalaccess.gov.sg** இணையத்தளத்திற்குச் செல்லுங்கள். **மேலே உள்ள பட்டியலில் 'For Applicant'** என்பதைத் தேர்ந்தெடுங்கள்.

**2** **சிங்பாஸ் பயன்படுத்தி உள்நுழையுங்கள்.** படிவத்தின் சில பகுதிகளில், எங்கள் பதிவேடுகளிலிருந்து பெறப்பட்ட விவரங்கள் நிரப்பப்பட்டிருக்கும். **படிவத்தைப் பூர்த்தி செய்து சமர்ப்பித்திடுங்கள்.**

**3** **குடும்ப உறுப்பினர்களின் ஒப்புதலைக் கேட்கும் கடிதம்/ குறுந்தகவல்/ மின்னஞ்சல்** அவர்களுக்குக் கிடைத்தவுடன், சிங்பாஸ் வாயிலாக அவர்கள் ஒப்புதல் அளிக்கவேண்டும்.

உங்கள் விண்ணப்பத்தின் நிலை குறித்து **10 வேலை நாட்களுக்குள்** குறுந்தகவலில் / மின்னஞ்சலில் தகவல் பதில் பெறுவீர்கள். அடுத்து என்ன செய்யவேண்டும் என்பது பற்றியும் நாங்கள் ஆலோசனை அளிப்போம்.

வீடுகளுக்கான மின்னிலக்கச் சேவைத் திட்டம் பற்றி உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால், மேல்விவரம் அறிய:

- விரைவுத் தகவல் (QR) குறியீட்டை வருடி https://go.gov.sg/digitalaccess-faq இணையத்தளத்தில் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளைப் படித்துப் பாருங்கள்
- தகவல்தொடர்பு, ஊடக மேம்பாட்டு ஆணையத்துடன் 6377 3800 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள்
- digitalaccess@imda.gov.sg முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்
- https://go.gov.sg/sgdcommhub இணையத்தளத்தில் பட்டியலிடப்பட்டுள்ள சமூக மன்றங்களிலும் பொது நூலகங்களிலும் அமைந்துள்ள எங்களது எஸ்ஜி மின்னிலக்கச் சமூக நடுவங்களுக்குச் செல்லுங்கள்

# IF YOU HAVE QUESTIONS, SCAN THIS QR CODE

If you have questions on DigitalAccess@Home, find out more by:

- scanning the QR code to visit the FAQs at https://go.gov.sg/digitalaccess-faq
- calling the IMDA hotline at 6377 3800
- emailing digitalaccess@imda.gov.sg
- visiting our SG Digital community hubs at selected Community Clubs (CC) and public libraries listed on https://go.gov.sg/sgdcommhub

如果您对住家数码共享计划有任何疑问或需要协助填写申请表格，请：

- 扫描二维码上网https://go.gov.sg/digitalaccess-faq查询常见问题
- 拨打资讯通信媒体发展局热线 6377 3800
- 发电邮至digitalaccess@imda.gov.sg
- 到访https://go.gov.sg/sgdcommhub网页所列的选定社区俱乐部和公共图书馆里的数码转型社区援助站

Sekiranya anda mempunyai soalan mengenai Skim 'Akses Digital@Rumah', ketahui lebih lanjut dengan:

- mengimbas kod QR bagi lungsuri soalan kerap ditanya (FAQ) di https://go.gov.sg/digitalaccess-faq
- hubungi talian hotline IMDA di 6377 3800
- e-mel digitalaccess@imda.gov.sg
- lawati hab masyarakat SG Digital di Kelab Masyarakat (CC) dan perpustakaan awam yang tersenarai https://go.gov.sg/sgdcommhub

வீடுகளுக்கான மின்னிலக்கச் சேவைத் திட்டம் பற்றி உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால், மேல்விவரம் அறிய:

- விரைவுத் தகவல் (QR) குறியீட்டை வருடி https://go.gov.sg/digitalaccess-faq இணையத்தளத்தில் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளைப் படித்துப் பாருங்கள்
- தகவல்தொடர்பு, ஊடக மேம்பாட்டு ஆணையத்துடன் 6377 3800 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள்
- digitalaccess@imda.gov.sg முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்
- https://go.gov.sg/sgdcommhub இணையத்தளத்தில் பட்டியலிடப்பட்டுள்ள சமூக மன்றங்களிலும் பொது நூலகங்களிலும் அமைந்துள்ள எங்களது எஸ்ஜி மின்னிலக்கச் சமூக நடுவங்களுக்குச் செல்லுங்கள்

@IMDAsg

All information provided is accurate at the time of printing and is subject to changes.
Please visit **www.digitalaccess.gov.sg** for the most updated information.

Printed in March 2025.